பக்கங்கள் 20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 29 ஞாயிற்றுக்கிழமை 13.07.2025 | அதிர்வு 343

### பிள்ளைகளுக்கு உணவு வாங்கிச் சென்ற இ.போ.ச. யாழ். சாலை காப்பாளர் விபத்தில் பலி



யாழ்ப்பாணத்தில் பிள்ளைகளுக்கு உணவு வாங்கிச் சென்ற குடும்பஸ்தர் வீதி விபத்தில் 02

# அமெரிக்காவிடம் இருந்து மேலும் வரிச் சலுகையை எதிர்பார்க்கும் இலங்கை

## இரு தரப்பு பேச்சுகள் தொடரும் என்கிறார் அநுர





அமெரிக்காவுடனான பேச்சுகளின் விளைவாக, விதிக்கப்பட்டிருந்த தீர்வை வரி விகிதத்தை 44 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாகக் குறைக்க முடிந்துள்ளது என்றும், அந்தப் பேச்சுகளைத் தொடர்வதன் மூலம் மேலும் சலுகைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றோம் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அதன்போது, இந்த நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம், வர்த்தக சமூகம் மற்றும் 02

### பத்து பரம்பரையாக உழைத்தும்

# பெருந்தோட்ட மக்களுக்கு இன்னும் காணி உரிமை வழங்கப்படவில்லை

## தமிழரசின் எம்.பி. சிறீதரன் கவலை



பத்து பரம்பரையாக இந்நாட்டுக்காக உழைத்தும் ஒரு துண்டு காணிகூட மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

கொட்டகலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02




அரசமைப்புக்கான பதிமூன்றாவது திருத்தம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வை எவ்வாறு இலங்கை ஆட்சிப் பீடம் இடக்கு, முடக்குப் போட்டு, முறையற்ற விதத்தில் பறித்தெடுத்து, தன் கைக்குள் அடக்கிக் கொள்கின்றது என்பது சம்பந்தமான விடயங்களை நேரில் பட்டறிந்து, கண்டு கொண்டவர்களில் அதிக அனுபவம் மிக்கவர் என்றால் அது இணைந்த வடக்கு, கிழக்கின் ஒரே முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள் தான். அதில் யாருக்கும் சந்தேகம் இருக்காது.

தமிழர் அரசியலில் சிறிது காலம் அவர் ஒதுங்கி இருந்தாலும் இப்போது மீண்டும் யாழ் மண்ணுக்குத் திரும்பியிருக்கிறார் – மும்முரமான 03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# ட்ரம்பின் வரி விதிப்பால் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்க இந்தியாவிடமிருந்துகூட நிவாரணம் எதிர்பார்க்க முடியாது

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்புகளால் நாட்டின் ஆடைத் தொழிற்துறை தற்போது பெரும் நெருக்கடியின் அறிகுறிகளைக் காட்டுகிறது. இந்தியாவுடன் கையெழுத்திடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகாததால் எமக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதிலும் நெருக்கடி ஏற்படும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆடை தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள உயர்மட்ட தொழிலதிபர்களை சந்தித்த போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்புகளால் நாட்டின் ஆடைத் தொழிற்துறை தற்போது பெரும் நெருக்கடியின் அறிகுறிகளைக் காட்டுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.



நமது பொருளாதாரம் ஆடைகள் மற்றும் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதால் கிடைக்கும் அந்நிய செலாவணியை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாறு பொருளாதாரத்தை வெறுமனே ஆடை ஏற்றுமதியால் மாத்திரம் இயக்க முடியும் என்று எண்ணினால் அது தவறு.

அடுத்த ஆண்டு ஐரோப்பாவில் பொருளாதார சரிவு ஏற்பட்டால், அந்தப் பக்கத்திலிருந்தும் நாம் பாதிக்கப்படுவோம். இந்நிலையில் இந்தியாவுடன் தேவையான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகாததால், அந்தப் பக்கத்திலிருந்தும் நிவாரணத்தை எதிர்பார்க்க முடியாது. நான் கூறியது போல் செயற்பட்டிருந்தால் இந்த ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டிருக்காது என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன் போது சுட்டிக்காட்டினார்.

சந்திப்பில் கலந்து கொண்டிருந்த ஆடைத் துறையில் முன்னோடி தொழிலதிபர் ஒருவர், இப்போது ரணில் பாதையிலோ அல்லது பெலவத்தை பாதையிலோ செல்லலாமா என்பதை நாம் முடிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இ.போ.ச....**

சிக்கி உயிரிழந்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை காப்பாளரான நயினாதீவைச் சேர்ந்த கி.பாலேஸ்வரன் (வயது-44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி, பலாலி வீதியில் அமைந்துள்ள அம்மாச்சி உணவகத்தில் நேற்று மதியம் பிள்ளைகளுக்கு உணவு வாங்கிக் கொண்டு பலாலி வீதியில் சைக்கிளில் ஏற முற்பட்டவேளை, வீதியில் மிக வேகமாக வந்த ஹயஸ் ரக வாகனம் அவர் மீது மோதியுள்ளது. அதில் படுகாயமடைந்தவரை அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

உயிரிழந்தவரின் இரு பிள்ளைகள் பேராதனை மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று வரும் நிலையில், இளைய மகள் அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ பெறுபேறுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பெருந்தோட்ட மக்களுக்கு...**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மலையக மக்கள் 200 வருடங்களுக்கு மேலாக இந்த மண்ணில் வாழ்கின்றனர். இலங்கையில் இருந்து ஒருவர் பிரிட்டனுக்கோ அல்லது கனடாவுக்கோ சென்றால் அங்கு 3 அல்லது ஐந்து வருடங்களில் குடியுரிமை கிடைக்கின்றது. வீடு வழங்கப்படுகின்றது. உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கின்றது.

ஆனால், இந்நாட்டுக்காகப் பத்து பரம்பரையாக உழைத்த மக்களுக்கு ஒரு துண்டு காணி கூட இன்னும் வழங்கப்படவில்லை. தொடர்ந்தும் காணி உரிமை அற்றவர்களாகவே வைக்கப்பட்டு வருகின்றனர்.

மாறி மாறி ஆட்சிக்குவரும் அரசுகள் இந்த மக்களுக்குக் காணி உரிமையை வழங்கவில்லை. ஒரு கொட்டகையை அமைப்பதாக இருந்தால்கூட நிர்வாகத்திடம் அனுமதி பெற வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அவர்கள் அனுமதி வழங்காத நிலையும் நீடிக்கின்றது.

வடக்கு, கிழக்கை விடவும் மலையகத்திலேயே காணியில்லாப் பிரச்சினை, வாழ்வியல் பிரச்சினை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை உள்ளிட்டவை அதிகளவு காணப்படுகின்றன.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குத் தற்போது வழங்கப்படுகின்ற நாளாந்த சம்பளம் போதுமானது அல்ல. தற்போதைய சூழ்நிலையில் நாளொன்றுக்கு 5 ஆயிரம் ரூபா கூட போதாது. நியாயமான மற்றும் நிரந்தர சம்பளம் வழங்கப்பட வேண்டும். அதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்ந்து குரல் கொடுக்கும்.” - என்றார்.

**அமெரிக்காவிடம் இருந்து...**

மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் சாதகமான திருத்தங்களை மேற்கொள்வதே அரசின் விருப்பமாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அமெரிக்காவினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய தீர்வை வரிக் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்களின் முன்னேற்றம், தற்போதைய நிலைமை மற்றும் இந்தத் தீர்வை வரிக் கொள்கை செயற்படுத்துவதுடன் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சவால்கள் தொடர்பில் ஏற்றுமதிக் கைத்தொழில் தொடர்பான அனைத்து தரப்பினருடனும் நேற்று சனிக்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சவாலான நேரத்தில், அதன் நேர்மறையான அம்சங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி புதிய சந்தை அணுகுமுறைகளை அடையாளம் காண அரசு மற்றும் தனியார் துறையும் இணைந்து செயற்படுவதன் அவசியம் மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தலுக்கான வாய்ப்புகள் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, மேற்கு மாகாண ஆளுநர் ஹனீஃப் யூசுப், மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஏ. விமலேந்திராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத், சர்வதேச வர்த்தக சபையின் தலைவர் ஷனில் பெர்னாண்டோ, தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் ஹுசீபா அக்பரலி ஆகியோருடன் பிராண்டிக்ஸ் குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி அஷ்ரப் ஒமர் உட்பட ஏற்றுமதித் துறையுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் மீட்பு!



அடையாளம் தெரியாத பெண் ஒருவரின் சடலத்தை மாத்தறைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மாத்தறை பறவைகள் சரணாலயத்துக்குச் செல்லும் பாலத்துக்கு அடியில் உள்ள நீர்நிலையில் இருந்து நேற்று மேற்படி பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட பெண் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று மாத்தறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

5 அடி உயரமுடைய 40 முதல் 45 வயது மதிக்கத்தக்க பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

திட்டங்களுடன்.

நேரடி அரசியலில் இறங்கும் எண்ணம் அவருக்கு இப்போதும் கிஞ்சித்தும் இல்லை. ஆயினும் தமது அனுபவத்தை – பட்டறிவை – தமிழ் சமூகத்தின் தற்போதைய இக்கட்டான நிலையில் பின்புலத்தில் இருந்தாவது அதற்கு வழங்க வேண்டிய கட்டாயம் இருப்பதாக அவர் கருதுகிறார்.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இருக்கும் எல்லாத் தமிழ் கட்சித் தலைவர்களையும் சந்தித்து, இருக்கின்ற மாகாண சபை முறைமையை அதிக வினைத்திறனுடையதாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஒன்றித்த செயற்பாட்டு மார்க்கம் ஒன்றை அவர்களுக்குள் ஏற்படுத்த அவர் விழைகின்றார்.

அரசமைப்பில் இருப்பதை முழுமையாக தமிழர் கைகளுக்குக் கொண்டு வருவதற்கான தீவிர செயல்பாட்டை ஐக்கியமாக முழுமூச்சுடன் முன்னெடுப்பதற்குத் தூண்டுவதே அவரது இலக்கு. திட்டம்.

அதற்கான அணுகு முறைக்குரிய சூழலை தமிழர் தரப்புகளுக்கிடையே வலியுறுத்தித் தூண்ட அவர் எண்ணுகின்றார்.

எல்லாத் தமிழ் அரசியல் தலைவர்களையும் சந்தித்து, ஒன்றுபட்ட செயற்பாட்டுக்கான வலியுறுத்தலை – அதற்கான சமரச தளத்தை – ஏற்படுத்துவதற்கான வாய்ப்பைச் சாத்தியமாக விழைகின்றார்.

இதற்காக, நேரடியாக அரசியலில் சம்பந்தப்படாத தரப்புகளை ஒன்றிணைத்து, வலிமையான ஒரு பின்புல கட்டமைப்பை உருவாக்கும் திட்டத்தையும் அவர் கொண்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

இந்த முயற்சியாக எல்லா தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களையும் அவர் சந்திப்பார் என்று கூறப்பட்டது.

ஒரு காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியில் சுரேஷ் பிரேமச்சந்திரனின் சகாவாக இணைந்து செயல்பட்டவர் அவர். பிற்காலத்தில் அக்கட்சியினர் இரு தரப்புகளாகி, எதிரெதிர்த் துருவங்களாகி, நீதிமன்றத்தில் மோதி, பிரிந்து, தனித் தனி ஆகிவிட்டனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர்) அணிக்கு வரதராஜப்பெருமாள் தலைமை வகிக்க, அந்தத் தரப்பு 'தமிழர் சமூக ஜனநாயக கட்சி' என்ற பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்டமைப்பாக இப்போது செயல்படுகின்றது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற கட்சி சுரேஷ் பிரேமச்சந்திரன் தரப்புடன் தங்கிவிட்டது.

இரு தரப்புகளும் – வரதர் தரப்பும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தரப்பும் – எலியும் பூனையுமாக இருந்தாலும், வரதர் தம்முடைய தற்போதைய சமரச முயற்சியின் ஆரம்பமாக இன்று சுரேஷ் பிரேமச்சந்திரனை அவரது வீடு தேடிச் சென்று சந்திக்க இருக்கிறார்கள் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

நேரடி அரசியலில் ஈடுபடும் எண்ணம் இல்லாமல், தமிழ்த் தலைவர்களை பின்புலத்திலிருந்து ஒன்றிணைக்கும் இந்த முயற்சியும், அதற்கு பக்கபலமாக கற்றறிந்த – சமூக ஈடுபாடுகள் கொண்ட – தரப்புக்களின் ஒரு கட்டமைப்பை உருவாக்கும் எத்தனமும் நல்ல விடயங்கள்தான். அது வெற்றியளிக்குமா என்பதற்குக் காலம்தான் பதில் கூற வேண்டும்.

"இறுதித் தீர்வுக்கான முயற்சி ஒருபுறம் நடக்கட்டும். அது சமஷ்டியா அல்லது அதை தாண்டியதா என்பது பற்றி எல்லாத் தரப்புகளும் தத்தமது இலக்குகளை – கொள்கைகளை – நிர்ணயித்து நகரட்டும். அதற்குக் குறுக்காக நாம் யாரும் போகத் தேவையில்லை. ஆனால் அதற்கு இடையில், இருக்கின்ற மாகாண சபை முறைமையே முழு அளவில் நடைமுறைப்படுத்தச் செய்வதற்கான ஒரு சமாந்தர வழிமுறையையும் நாங்கள் முழு ஈடுபாட்டுடன் முன்னெடுக்க வேண்டும். எல்லாத் தமிழர் தரப்புகளும் ஒன்றிணைந்து அதை முன்னெடுத்தால் அதிலும் கணிசமான நகர்வுகளை நாங்கள் நிலை நாட்ட முடியும். அது, முதல் கட்டமாக – குறைந்தபட்சம் இருப்பதை தக்க வைக்க – உதவும். அந்த வகையில் இது யதார்த்த பூர்வமான – சாத்தியமான – நிலைப்பாடு." – என்கிறார் அவர். அதிலும் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

* * *

தரமற்ற – மனித பாவனைக்கு உதவாத – இம்யூனோகுளோபுலின் மருந்துக் குப்பிகளை இறக்குமதி செய்தமை சம்பந்தமாகத் தொடரப்பட்ட வழக்கில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் பிற பிரதிவாதிகள் மீதான வழக்கை மூன்று நீதிபதிகள் கொண்ட கொழும்பு நிரந்தர மேல் நீதிமன்ற விசாரணை அமர்வு (ட்ரயல் அட் பார்) ஒத்திவைத்துள்ளது. ஏன் தெரியுமா?

இந்த வழக்கில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் 11 பேர் பிரதிவாதிகள். இந்தப் பன்னிரண்டு பேருக்குமான குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டு விட்டன. ஆனாலும் அவற்றுடன் சேர்த்துக் கையளிக்கப்பட வேண்டிய இணைப்புகள் இன்னும் வழங்கப்படவில்லை.

இந்த இணைப்புகளின் போதிய பிரதிகளை – பன்னிரண்டு பிரதிவாதிகளுக்கும் வழங்கக் கூடியதாக – அச்சிட்டு முடிக்கக் குறைந்தது 21 நாள்களாவது செல்லும் என்று அரசு அச்சகர் கூறியிருக்கின்றார் என அரசுத் தரப்பில் வழக்குத் தொடுநராக ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹகம நீதிமன்றில் குறிப்பிட்டார்.

பன்னிரண்டு பிரதிவாதிகள் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான இணைப்புகளை அச்சிடுவதற்கு மட்டும் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமாகச் செலவாகுமாம்.

ஒரு பிரதிவாதிக்கு இணைப்புகளை அச்சிடுவதற்கு மட்டும் 8 லட்சத்து 66 ஆயிரத்து 565 செலவாகும் என்று அவர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார். எனவே, பன்னிரண்டு பிரதிவாதிகளுக்கும் இணைப்புகளை அச்சிடுவதற்கு ஒரு கோடியே 3 லட்சத்து 98 ஆயிரத்து 780 ரூபாவுக்கும் அதிகம் செலவாகும்.

தரமற்ற தடுப்பூசிகளை வாங்கியதன் மூலம் 14 கோடி ஐம்பது லட்சம் ரூபா மோசடி செய்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில், குற்றப் பத்திரத்துடனான இணைப்புகளை அச்சிட்டு குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்குக் கையளிப்பதற்கு மட்டும் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் செலவிட வேண்டியிருக்கின்றது.

ஆக, இதுவும் மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கின்ற வேலைதான் போலும்...!

# இந்தியாவுக்கு விதிக்கப்படும் வரியும் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும்

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை



இந்தியாவுக்கு எந்தளவு வரி அறிவிக்கப்படவுள்ளது என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் இந்தியாவுக்கு விதிக்கப்படும் வரியும் எமக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

"ஆசியாவில் இலங்கை மாத்திரமே அமெரிக்காவுடன் தீர்வை வரி தொடர்பில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்திருந்தார்.

அது மாத்திரமின்றி இரு நாடுகளும் இணைந்து கூட்டு அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமான முன்னெடுக்கப்படுவதாகவும் தொடர்ந்தும் தெரிவித்து வந்தனர். 15 சதவீத வரி குறைப்பை பெற்றுக் கொண்டு ஆடை தொழிற்துறையை பாதுகாக்க முடியும் என்றும் உறுதியளித்தனர்.

ஆனால் இவை அனைத்தும் பொய் என்பதை நிரூபிக்கும் வகையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு 30 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கைக்கு 30 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ள போதிலும், பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகளுக்கு 20 சதவீதம் மாத்திரமே வரி விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமை இலங்கையின் ஆடை உள்ளிட்ட ஏற்றுமதிகளுக்கான கேள்வி வீழ்ச்சியடையச் செய்யும். இது மாத்திரமின்றி மலேசியா, ஜப்பான், தென் கொரியா போன்ற நாடுகளுக்கு 25 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

44 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக வரி குறைக்கப்பட்டுள்ள போதிலும், பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகள் எம்மை விட குறைவான வரி வீதத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமையால் அது அமெரிக்க ஏற்றுமதி சந்தையில் எமக்கு பாரிய சவாலாக அமையும்.

ஏனைய நாடுகள் தொடர்பில் எந்தவொரு தகவலையும் தெரிந்து கொள்ளாமல், இலங்கை மாத்திரமே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். அரசாங்கத்தின் அசமந்த போக்கினால் ஏற்பட்டுள்ள இந்த நிலைமை குறித்து அனைவரும் கவலையடைந்துள்ளனர்.

இந்த நிலைமையை முகாமைத்துவம் செய்வதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. இவற்றுக்கு மத்தியில் இந்தியாவின் நிலைவரம் என்ன என்பது இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. இந்தியாவுக்கு எந்தளவு வரி அறிவிக்கப்படவுள்ளது என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்தியாவுக்கு விதிக்கப்படும் வரியும் எமக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும். எவ்வாறிருப்பினும் இந்த விவகாரத்தில் அரசாங்கம் பொய் கூறியமையால் முழு நாடும் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது." என்றார்.

# மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவப் பெருவிழா

மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவப் பெருவிழா நாளை திங்கள் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் பெருந்திருவிழா நடைபெற உள்ளது.

இவ்வாண்டுக்கான வருடாந்த உற்சவப் பெருவிழாவானது விசுவாவசு வருடம் ஆனி மாதம் 30 அம் நாள் நாளை திங்கள் கிழமை சதுர்த்தி திதியும் அவிட்ட நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த சுப வேளையான பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து 2 ஆம் திருவிழாவாக வேதபாராயணத் திருவிழாவும், 3 ஆம் திருவிழாவாக பக்தி முத்தி பாவனோற்சவமும், 4 ஆம் திருவிழாவாக புஸ்பாஞ்சலி திருவிழாவும், 5 ஆம் திருவிழாவாக திருவிழக்கு பூசையும், 6 ஆம் திருவிழாவாக கருட வாகனத் திருவிழாவும், 7 ஆம் திருவிழாவாக மாம்பழத் திருவிழாவும் 8 ஆம் திருவிழாவாக பாம்புத் திருவிழாவும், 9 ஆம் திருவிழாவாக வேட்டைத் திருவிழாவும் தொடர்ந்து வரும் தினங்களில் இடம்பெற உள்ளன.

தொடர்ந்து 10 ஆம் திருவிழாவான சப்பைரத திருவிழா வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்று மறுநாள் வியாழக்கிழமை ஆடி அமாவாசை 1008 சங்காபிசேகம் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு சமுத்திர தீர்த்த உற்சவமும், 12 ஆம் திருவிழாவாக திருமஞ்சன கேணி உற்சவமும், 13 ஆம் திருவிழாவான பூங்காவனத் திருவிழா வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம்பெற்று மறு நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு பிராஜசித்த அபிசேகம் இடம் பெற்று மாலை 6.00 மணிக்கு வைரவர் மடையுடன் நிறைவுக்கு வரஉள்ளது.

வருடாந்த திருவிழா காலத்தில் தினமும் காலை 7.00 மணிக்கு உற்சவகால பூசையும், காலை 8.00 மணிக்கு 108 சங்காபிசேகமும், காலை 11.00 மணிக்கு விசேட பூசையும், நண்பகல் 12.00 மணியளவில் மகேஸ்வர பூசையும் இடம்பெற்று மாலை பூசைகள் மாலை 6.00 மணிக்கு சாயரட்டை பூசையுடன் ஆரம்பமாகி



6.30 மணிக்கு பஜனை வழிபாடும், 7.00 மணிக்கு வசந்த மண்டப பூசை நிறைவு பெற்றதும் நாகதம்பிரான் உள்வீதி, வெளிவீதி உலா இடம்பெற உள்ளது.

ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்கள் தமிழ்ப் பண்பாட்டு உடையுடன் ஆசார சீலர்களாக வருகை தருவதுடன், தங்களால் இயன்ற பால், தயிர், இளநீர், பூமாலைகள், பூக்கள் முதலியவற்றை வழங்கி நாகதம்பிரானின் திருவருளை பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

# யாழ். இந்துக் கல்லூரியில் 82 மாணவர்களுக்கு 9 ஏ

2024 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 82 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

73 மாணவர்கள் 8 பாடங்களிலும், 33 மாணவர்கள் 7 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

அதேவேளை, 24 மாணவர்கள் 6 பாடங்களிலும், 20 மாணவர்கள் 5 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 345 மாணவர்களில் 342 பேர் சித்தியடைந்துள்ளனர்.

# எதிர்ப்புப் பதாதையில் கையொப்பமிடும் போராட்டம் மட்டக்களப்பு நகரத்திலும் நேற்று ஆரம்பித்து வைப்பு

## சம உரிமை இயக்கத்தின் ஒழுங்கமைப்பில்







**(கனகராசா சரவணன்)**

காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்கு!, இன்னொரு அடக்குமுறைச் சட்டம் வேண்டாம்!, பயங்கரவாதத்தடைச்சட்டத்தை ரத்துசெய்!, அனைத்து தேசிய இனங்களுக்கும் சம உரிமைகளை உறுதி செய்யும் அரசமைப்பிற்காகப் போராடுவோம்! – என்ற தலைப்பில் எதிர்ப்பு பதாதையில் கையொப்பமிடும் போராட்டம் ஒன்றை சம உரிமை இயக்கம் மட்டக்களப்பு பஸ்தரிப்பு நிலையத்தில் நேற்று சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தனர்.

மாவட்ட இணைப்பாளர் கிருபாகரன் தலைமையில் எதிர்ப்பு பதாதையில் கையொப்பமிடும் போராட்டம் நேற்றுஜ் காலை 11.00 மணிக்கு மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பிடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போது ஈரோஸ் ஜனநாயக முன்னணி கட்சியின் தலைவர் இராஜேந்திரா, சம உரிமைகள் இயக்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு எதிர்ப்பு பதாதையில் கையொப்பமிடும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்து துண்டு பிரசுரங்களை விநியோகித்தனர்.

இதன் போது அங்கு அதிகமான பொது மக்கள் ஆர்வமாகச் சென்று இந்த எதிர்ப்பு பதாதையில் கையொழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது

# தனியார் பஸ் மோதி வயோதிபப் பெண் பலி



தனியார் பஸ் மோதி வயோதிபப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து காலியில் பத்தேகம பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்றுள்ளது பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலியில் இருந்து பயணித்த தனியார் பஸ் ஒன்று பஸ் தரிப்பிடத்துக்குள் நுழையும் போது பஸ் தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்த பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த பெண் காலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 78 வயதுடைய வயோதிபப் பெண் ஆவார்.

இந்த விபத்து தொடர்பில் பத்தேகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் முன்னாள் சிப்பாய் சிக்கினார்



வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு – பிலியந்தலை பிரதேசத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய முன்னாள் இராணுவச் சிப்பாயே நேற்று வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.



# கல்வித் துறையில் புதிய சீர்திருத்தங்கள்

## பிரதமர் விளக்கம்

உத்தேச புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

புதிய சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதன் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று முன்தினம் விளக்கமளிக்கப்பட்டதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சீர்திருத்தங்களுக்கான கொள்கைகள், பாடத்திட்ட சீர்திருத்தம், சீர்திருத்தங்களைச் செயற்படுத்தும் நடைமுறைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி போன்ற அடிப்படை விடயங்கள் குறித்து இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் தேசிய கல்வி ஆணைக் குழு மூலம் இந்த புதிய கல்வி சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்படும் விதம் மற்றும் கண்காணிக்கப்படும் விதம் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

21 ஆம் நூற்றாண்டு மற்றும் அதற்கு அப்பால் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ளும் திறன் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதற்கான அடிப்படை அடித்தளத்தை அமைப்பது பிரதான நோக்கமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த பிரஜைகளை நாட்டின் நிலையான தேசிய அபிவிருத்தி மற்றும் சமாதானச் செயன்முறைக்கு பங்களிப்பாளராக மாற்றுவது இந்த புதிய கல்வி சீர்திருத்தங்களின் முக்கிய நோக்கமாகும் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

புதிய கல்வி சீர்திருத்தங்கள் குறித்த தங்களின் கருத்துகள் மற்றும் புதிய முன்மொழிவுகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது முன்வைத்துள்ளனர்.

விசேட தேவைகள் உள்ள மற்றும் மாற்றுத்திறனாளிகளான பிள்ளைகளுக்கு இந்த கல்வி சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் தேவைகள் குறித்து இதன்போது விசேடமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.









# டிஜிட்டல் கல்வித் திட்டத்திற்கு அமெரிக்காவில் இருந்து உதவி







இலங்கையின் டிஜிட்டல் கல்வித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்காவின் கேட்ஸ் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவுடனான சந்திப்பின் போது, கேட்ஸ் அறக்கட்டளையின் உலகளாவிய மேம்பாட்டுத் தலைவர் கிறிஸ் எலியஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சிறுவர்களினதும், பெண்களினதும் ஊட்டச்சத்துத் தேவைகளை மேம்படுத்துதல், விவசாயத் துறையை மேம்படுத்துவதில் புதிய டிஜிட்டல் கருவிகளின் பயன்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில், கேட்ஸ் அறக்கட்டளை ஒத்துழைப்பு வழங்க தயாராக உள்ளதாகவும் கிறிஸ் எலியஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிராந்தியத்தில் டிஜிட்டல் தொழில்நுட்ப மேம்பாட்டை முன்னெடுப்பதில் அறக்கட்டளையின் பங்களிப்பு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தநிலையில், பாடசாலைகளில் மதிய உணவு வழங்குதல் தொடர்பான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து, கேட்ஸ் அறக்கட்டளை பிரதிநிதிகளுக்குத் பிரதமர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அத்துடன், பிரதமரின் செயலாளர் தலைமையிலான டிஜிட்டல் கல்விப் பணிக்குழுவின் செயற்பாடுகள் குறித்தும் பிரதமர், கேட்ஸ் அறக்கட்டளை பிரதிநிதிகளுக்கு எடுத்துரைத்துள்ளார்.

இதேவேளை, பிரதமரின் கோரிக்கைக்கு ஏற்ப, டிஜிட்டல் கல்விப் பணிக்குழுவின் செயற்பாடுகளுக்கும், 2026 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கவிருக்கும் உத்தேச கல்விச் சீர்திருத்தத்திற்கும் ஒத்துழைப்பு வழங்குவதாக கேட்ஸ் பிரதிநிதிகள் பிரதமருக்கு உறுதியளித்துள்ளனர்.

# பிரித்தானியாவின் கரிசனைக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

உலகளாவிய வர்த்தகம் கடினமாக இருக்கும் நேரத்தில் பிரித்தானியா அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை ஆதரித்து வருகிறது. பிரித்தானியாவின் இந்த கரிசனைக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் சகல பொருட்களுக்கும் 30 வீத பரஸ்பர தீர்வை வரியை விதித்துள்ளார்.

ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து இந்த வரி நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களிலிருந்து விடுபடச் செய்யும் நோக்கில் ஆடை உட்பட ஏனைய பொருட்களை வரியின்றி இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.



பிரித்தானியாவின் இந்த தீர்மானம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலகளாவிய வர்த்தகம் கடினமாக இருக்கும் நேரத்தில் பிரித்தானியா அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை ஆதரித்து வருகிறது. பிரித்தானியாவின் இந்த கரிசணைக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் கீழ் பிரித்தானியா அதன் மூல விதிகளை தளர்த்தியுள்ளது.

இதன் பொருள் பல்வேறு துறைகள் ஏற்றுமதி செய்வதற்கும், அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், அந்நிய செலாவணி வரவை அதிகரிப்பதற்கும் அதிக வாய்ப்புகள் உள்ளன என்பதாகும்.

நாம் இதைப் பயன்படுத்திக் கொண்டு மிகவும் தேவையான வர்த்தக வெற்றியைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்.

இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து இறக்குமதிகளை எளிதாக்குவதற்கு திருத்தப்பட்ட வரி திட்டத்தை பிரித்தானியா வெளியிட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது. அதற்கமைய ஆடை போன்றவற்றை வரியின்றி இறக்குமதி செய்ய பிரித்தானியா தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# செம்மணியும் சூரியகந்தவும்

'தனக்கு தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம்' என்பார்கள். தனது விடயமாக இல்லா விட்டால் சுளகு அவ்வளவு துடுக்காகச் செயல்படாது போலும். ஒப்புக்குச் சப்பாணியாகத்தான் செயற்படும் போல.

அதுபோலதான் இப்போது தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸவின் கருத்தும் இருக்கின்றது.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம், தானும் முன்னர் ஜே.வி.பியில் அங்கம் வகித்தபடி முண்டு கொடுத்த அப்போதைய அரசின் மீதான குற்றச்சாட்டாக நீளுவதால் அந்த மனிதப் புதைகுழி விவகாரத்தைக் குறைமதிப்புக்குள்ளாக்கி, உணர்வு பூர்வமான அந்த விவகாரத்தை கொச்சைத்தனமாக அர்த்தப்படுத்தி, அவர் கீழ்த்தரமாகப் பேசுகின்றார்.

"யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் எலும்புக்கூடுகளை அகழ்ந்து எடுப்பதால் என்ன பயன் கிடைக்கும் என்று தமிழர்கள் எண்ணுகின்றார்கள்? அதனால் எந்தப் பயனும் கிடைக்காது. முதலில் அந்த மனித எலும்புக்கூடுகள் தமிழர்களுடையவை தான் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இன்னமும் பரிசோதனை நடத்தாமல் அந்த மனித எலும்புக்கூடுகளை வைத்துத் தமிழ்த் தரப்பினர் அரசியல் இலாபம் தேட முற்படுகின்றனர்." - இவ்வாறு விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கின்றார்.

அவருக்குத் தாம் 16 அல்லது 17 வயது இளைஞனாகப் பார்த்த (சில சமயங்களில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கவும் கூடிய) ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சிக் காலத்தில் இதே போன்று இடம் பெற்ற ஒரு விவகாரத்தை நினைவூட்டுவது பொருத்தமாக இருக்கும்.

1987 க்கும் 89 க்கும் இடையில் நடைபெற்ற ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சிக் காலத்தில் கொல்லப்பட்டவர்கள் என்று நம்பப்படும் சுமார் 300 வரையான சிங்கள மக்களின் சடலங்கள் புதைக்கப்பட்டன எனக் கூறப்படும் மனிதப் புதைகுழி ஒன்று இரத்தினபுரி மாவட்டம் எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் சூரியகந்தவில் 1994 இல் கண்டுபிடிக்கப்பட்டது.

1989 இல் அவரது வயதை ஒத்தவர்களாக இருந்த - ஜே.வி.பியின் தீவிர ஆதரவாளர்கள் என்று கருதப்பட்ட - எம்பிலிப்பிட்டிய மகா வித்தியாலய மாணவர்கள் 31 பேர் அச்சமயத்தில் இரவோடு இரவாக வீடுகளில் இருந்து கடத்தப்பட்ட பின்னர் காணாமல் போயிருந்தனர்.

அவர்களின் சடலங்கள் உட்பட பல சடலங்கள் அந்த சூரியகாந்த மனிதப்புதை குழியில் இருந்து வெளிவந்தமையை அடுத்து எழுந்த அரசியல் உணர்வெழுச்சியும் அதுவரை 18 ஆண்டுகள் நீடித்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை ஒரே அடியாக முடிவுக்கு கொண்டு வந்தது என்பது மறுக்கக்கூடியதல்ல.

சூரியகந்த புதைகுழி தோண்டப்பட்ட சமயத்தில் விமல் வீரவன்ஸ போன்றோரும் உணர்வுபூர்வமான அந்த விடயத்தின் பிரதிபலிப்பை அரசியலாக்கும் தந்திரத்தில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது மறுக்கக் கூடியது அல்ல.

அவற்றை எல்லாம் செய்துவிட்டு, இப்போது தமிழர் பிரதேசத்தில் மனிதப் புதைக்குழிகள் கண்டுபிடிக்கப்படும் போது, அதற்கான பொறுப்பும் குற்றச்சாட்டும் அப்போது அவர் ஆதரித்த அரசின் மீதும் ஆயுதப் படைகள் மீதும் சுமத்தப்படும் சூழ் நிலையில், இந்தச் செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கீழ்த்தரமாக கருத்துத் தெரிவிக்கிறார் அவர்.

90 களின் நடுப்பகுதியில் இருந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரம் தமிழர்களின் கதி குறித்து இன்னமும் தெளிவில்லாத நிலையில், இப்போது அம்பலமாகும் மனிதப் புதைகுழி குறித்து இப்படிச் சின்னத்தனமாக விமல் வீரவன்ஸ பேசுவது பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் மிக மோசமான மனவமைப்பின் பிரதிபலிப்புதான். அந்தப் பேரினவாதத்தின் உண்மை முகம் அதுதான்.

இதுதான் உண்மையான பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தின் மனநிலை. இந்தக் கீழ்த்தரமான நிலைப்பாட்டில் இருந்து தென்னிலங்கை மீளாத வரை, நடந்து முடிந்த அராஜகங்களுக்கு நீதி நிலைநாட்டப்படுவதோ, உண்மைகள் கண்டறியப்படுவதோ, பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படுவதோ சாத்தியப்படப் போவதில்லை என்பதுதான் இங்கு கள யதார்த்தமாகும்.



# மோ.சைக்கிளுடன் மோதியது லொறி! வயோதிபர் ஒருவர் பரிதாப மரணம்!!

மோட்டார் சைக்கிளுடன் லொறி மோதிய விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு – கல்கிசை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி, மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் செலுத்துநர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கல்கிசை பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய வயோதிபரே உயிரிழந்தவர் ஆவார். இந்த விபத்து தொடர்பில் கல்கிசைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் சைக்கிள் - கார் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயம்






பருத்தித்துறை, மாலைசந்தை பகுதியில் மோட்டார் சைக்கிள் சொகுசு கார் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை பிரதான வீதி இலகடி, மாலைசந்தை பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் இறைச்சி கோழிகளை ஏற்றியவாறு மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் அப் பகுதியில் உள்ள கோழி இறைச்சி விற்பனை நிலையத்திற்கு திரும்ப முற்பட்ட போது பின்னால் பயணித்த சொகுசு கார் மோதித்தள்ளி விபத்துக்குள்ளானது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சொகு கார் அதிகவேகமாக பயணித்தமையே விபத்துக்கு காரணம் என அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். நெல்லியடி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகைதந்து பார்வையிட்டதுடன். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இரத்த தான முகாம்

வல்வெட்டித்துறை இரத்த தான சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 80 ஆவது அமுதவிழா இரத்த தான முகாம் வல்வெட்டித்துறை, நெடியகாடு பகுதியில் அமைந்துள்ள கணபதி மஹாலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற உள்ளது.

வல்வை 21 நண்பர்கள், வல்வை 1977 இலண்டன் நண்பிகள் மற்றும் நலன் விரும்பிகள் அனுசரணையில் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கம் மற்றும் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கபட உள்ள இரத்த தான முகாமில் பங்கேற்று குருதி வழங்கும் குருதிக் கொடையாளர்களுக்கு கற்றல் உபகரணங்களுடன் அன்பளிப்புகள் வழங்கப்பட உள்ளன.

இந்த இரத்ததான முகாமில் இணைந்து குருதிக்கொடை வழங்க ஆர்வமுள்ளவர்களை 0779911131 என்ற இலக்கத்திற்கு தொடர்புகொண்டு முன்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.





# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 21 மோ. சைக்கிள்களுடன் இருவர் கைது!

## ஹம்பாந்தோட்டை பறவைகள் பூங்காப் பகுதியில் சம்பவம்

நாட்டிற்குள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகளால் நேற்று சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை, நாகரவெவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை பறவைகள் பூங்காவில் உள்ள ஒரு சேமிப்பு களஞ்சியத்துக்குள் பதுக்கப்பட்டிருந்த இந்த 21 மோட்டார் சைக்கிள்களையும் மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

பதில் பொலிஸ் மா அதிபருக்குக் கிடைத்த சிறப்புத் தகவலின் அடிப்படையில், மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் இயக்குநர், பொலிஸ் அத்தியட்சகர் கமல் ஆரியவன்ச உள்ளிட்ட அதிகாரிகள் குழு இந்த சோதனையை மேற்கொண்டது.

வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட, நாட்டிற்கு இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்ட, அதிக திறன் கொண்டவை உட்பட 21 மோட்டார் சைக்கிள்களை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை நகரவேவவில் அமைந்துள்ள பறவைகள் பூங்கா மற்றும் ஆராய்ச்சி மையத்தில் உள்ள பறவை தீவனக் கிடங்கில் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

இந்த மோட்டார் சைக்கிள்கள் ஒவ்வொன்றும் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ளவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், பறவைகள் சரணாலய வளாகத்திற்குள் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்ட 04 கஞ்சா செடிகளுடன், இந்தப் பறவை பூங்காவின் மேலாளர் மற்றும் சேமிப்பாளரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 40 மற்றும் 50 வயதுடைய மாத்தறை மற்றும் மித்தேனியா பகுதிகளில் வசிப்பவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
















# உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுடன் நேற்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சந்திப்பு

(பாறுக் ஷிஹான்)

சுகாதாரதுறையை வினைத்திறனுடன் முன்னெடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிரின் நெறிப்படுத்தலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று மாநகர சபையின் பிரதி முதல்வர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், நிந்தவூர், நாவிதன்வெளி, காரைதீவு ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது திண்மக் கழிவகற்றல், டெங்கு ஒழிப்பு, பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வைத்தியசாலைகளின் வளப்பற்றாக்குறை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் சுகாதாரத் தேவைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



















# திருமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்கள் ஜனாதிபதி மாளிகை, செயலகத்தைப் பார்வையிட்டனர்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்கள் ஜனாதிபதி மாளிகைக்கு நேற்று முன்தினம் வெள்ளி சென்று அதனைப் பார்வையிட்டனர்

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் மாணவர்களுக்கு அவர்களின் கல்விச் சுற்றுலாவுடன் இணைந்த வகையில் ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்துள்ள விசன் நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்பும் அன்று கிடைத்தது.

ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் இலங்கை நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் பிரிவுடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்துடன் இணைந்து, கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் மற்றும் அதன் கருத்தியல் ரீதியான பெறுமதி குறித்தும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

ஒரு பாட அறிவிற்கு மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ளாமல், ஒவ்வொரு துறை தொடர்பிலும் ஆராய்ந்து புத்தாக்கத் துறையை வெல்லும் திறனை சிறு வயதிலிருந்தே பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், தமது வாழ்வின் ஒவ்வொரு அனுபவத்தையும் ஆராய்வதன் மூலம் வாழ்வின் சவால்களை வெற்றிகொள்ள முடியும் எனவும் பேராசிரியர் கோமிக உடுகமசூரிய மாணவர்களுக்காக பயனுள்ள உரை ஒன்றையும் நிகழ்த்தினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை உறுதி செய்யும் வகையில் அடையாளப் பரிசாக பாடசாலைக்கு பெறுமதியான மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கே.என்.எம் குமாரசிங்க, ஜனாதிபதி அலுவலகத்தின் முப்படை ஒருங்கிணைப்புப் பிரிவின் பணிப்பாளர் எயார் கொமடோர் ஆசிரி கால்லகே, அதன் உதவிப் பணிப்பாளர் மேஜர் நதீக தங்கொல்ல மற்றும் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.










# 14 சுற்றுலாப் பயணிகளுடன் நெடுந்தீவு சென்று திரும்பிய படகு கடலில் மூழ்கியது; பயணிகள் காப்பாற்றப்பட்டனர்!

**(ந.லோகதயாளன்)**

நெடுந்தீவுக்கு சுற்றுலா சென்று திரும்பிய 14 சுற்றுலாப் பயணிகள் பயணித்த படகு கடலில் மூழ்கியபோதும் பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

நெடுந்தீவைச் சேர்ந்த தனியார் ஒருவருக்குச் சொந்தமான சுற்றுலாப் பயணிகளை ஏற்றும் சிறியரக படகில் நெடுந்தீவுக்கு சென்று திரும்பும் போது படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக படகு கடலில் மூழ்கத் தொடங்கியுள்ளது. எனினும் பயணிகள் 12 பேர் மற்றும் 02 பணியாளர்கள் உள்பட 14 பேர் உயிராபத்து இன்றி பத்திரமாக மீட்கப்பட்டனர்.

நடுக்கடலில் படகில் இருந்து வெள்ளைக்கொடி காட்டுவதனை அவ்வழியே சென்ற நெடுந்தீவு தனியார் படகான சபரிஷ் படகின் பணியாளர்கள் அவதானித்து, விரைந்து செயற்பட்டு சேதமடைந்த படகில் இருந்த சுற்றுலாப் பயணிகளை பத்திரமாக தமது படகிற்கு மாற்றினர் அது நடந்து சில நிமிடங்களில் சேதமடைந்த படகு முழுமையாகக் கடலில் முழ்கியுள்ளது.

இதன் பின்னர் கடற்படையினரது படகு அப்பகுதிக்குச் சென்று மீட்கப்பட்ட பயணிகளை கடற்படைப் படகில் ஏற்றி குறிகாட்டுவானை வந்தடைந்துள்ளது.

# ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர் மீதான தாக்குதலைக் கண்டித்து ஹரீஸ் அறிக்கை





ஊடகவியலாளரும், சமூக செயற்பாடாளருமான நூருல் ஹுதா உமர் நேற்று முன்தினம் இரவு தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த தாக்குதலை மேற்கொண்டவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்த தாக்குதல், ஊடகவியலாளர்களின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பை குறைக்கும் ஒரு முயற்சியாகும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தாம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தையும் உரிமைமையையும் மீறிச் செயற்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஊடகவியலாளர்கள், சமூகத்தின் கண்காணிப்பாளர்களாகச் செயல்படுகிறார்கள். அவர்களுக்கு எதிரான தாக்குதல்கள், சமூகத்தின் சுதந்திரமான தகவல் பரிமாற்றத்தை பாதிக்கக்கூடும். எனவே, இந்த சம்பவம் மீது உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிலைமையில், சமூகத்தின் ஒற்றுமையும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பும் முக்கியமாகும். எனவே இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர்கள் உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன் மூலம் ஜனநாயக விரோதிகளின் வன்முறை போக்குகளுக்கு வெகுஜன தொடர்பு சுதந்திரம் இலக்காகுவதிலிருந்தும் விடுபட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். - என வலியுறுத்தியுள்ளார்.

# லெட்சுமணன் முருகபூபதி; ஒரு பன்முக ஆளுமை!

**ஆஸ்திரேலியாவில் தமிழ் எழுத்தாளன் எனும் அடையாளத்தின் முகவரியாளராக மிளிர்பவர் லெ.முருகபூபதி . அவரின் அகவை நாள் (ஜூலை 13) இன்றாகும்.**



கிறிஸ்டி நல்லரெத்தினம்

1951 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் திகதி, நிசப்தமான அந்த வெள்ளி இரவில் நுரை தள்ளி கரைநனைக்கும் அலை யோசையைத் தவிர எங்கும் அமைதி. நீர்கொழும்பு மகப்பேறு வைத்தியசாலையில் 'வீல், வீல்' எனும் ஒரு குழந்தையின் அலறல் அந்த இரவின் அமைதியை கலைத்தது!

ஒரு அன்புத் தாய் குழந்தையை வாரியணைத்து உச்சி முகர்ந்து தந்தை லெட்சுமணனின் கரங்களில் பாலகனை ஒப்புவித்தாள். குடும்பத்தின் முதல் மகன் என்ற பெருமிதம் அவர் கண்களில் ஒரு புது ஒளியை தோற்றுவித்தது. தந்தை குனிந்து மழலையின் காதருகில் ஒரு மந்திரம் போல் "முருக....பூபதி" என நீட்டி விளித்து அவனை மெதுவாய் தாயின் அரவணைப்புக் சொந்தமாக்கினார்.

அன்று அம்மழலையுடன் ஒட்டிக் கொண்ட 'முதல்' எனும் வார்த்தை அவன் வாழ்வில் நிரந்தரமாகவே அழியாச் சுடராய் அன்று ஏற்றிவைக்கப்பட்டது.

இலங்கையில் வடமேல் மகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்புநகரில் 1954 ஆம் ஆண்டு இந்து தமிழ்ப் பிள்ளைகளுக்காக தொடங்கப்பட்ட ஆரம்பப் பாடசாலை விவேகானந்தா வித்தியாலயத்தில் முதல் மாணவனாக 1954 ஆம் ஆண்டு விஜயதசமி தினமன்று ஏடு தொடக்கி வித்தியாரம்பம் செய்வித்து தன் கல்விப் பயணத்தை ஆரம்பித்தார் முருகபூபதி, இவரின் மாணவ பதிவு இலக்கம் : 1.

இது முருகபூபதியின் முதலாம் 'முதல்'!


வருடங்கள் உருண்டோடின. 1975 ஆம் ஆண்டு இந்த இலக்கிய குழந்தையின் இருபத்தியோராவது பிறந்த நாள் பரிசாக இவர் எழுதிய 'கனவுகள் ஆயிரம்' எனும் முதல் சிறுகதை மல்லிகை இதழில் வெளிவந்தது. அவர் பிறந்த நெய்தல் மண்ணின் வாழ்வைச் சித்தரிக்கும் கதை இது. தனது முதல் சிறுகதையே ஈழத்தின் முன்னணி இலக்கிய சஞ்சிகையில் வெளிவந்ததையிட்டு இந்த இளம் படைப்பாளிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

அக்கதையைஆயிரம்தடவைக்குமேல் படித்ததாய் பின்னாளில் ஒரு பேட்டியில் சொல்லியிருந்தார். இந்த முதல் சிறுகதையை உள்ளடக்கிய ' சுமையின் பங்காளிகள்' எனும் முதல் சிறுகதை தொகுப்பிற்கு 1976 இல் இலங்கை தேசிய சாகித்திய விருது கிடைத்தது.

முருகபூபதியின் இரண்டாம் 'முதல்'!

இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளர் டொமினிக் ஜீவா கண்டெடுத்த முத்துக்களில் ஒன்று முருகபூபதி என்றால் மிகையாகாது. இவரது சிறுகதைகளைபுறக்கணித்த வீரகேசரி, தினகரன் பத்திரிகைகள் 1976 ஆம் ஆண்டு இவரது முதல் சிறுகதைத் தொகுப்புக்குச் சாகித்திய விருது கிடைத்ததும் முருகபூபதியின் படத்துடன் செய்திகளை வெளியிட்டுத் தமக்குக் கௌரவம் தேடிக்கொண்டன.

தன் முதல் சிறுகதையின் படைத்தலை பற்றி ஒரு பேட்டியில் இப்படி நனவிடை தோய்கிறார் அவர், "மல்லிகை ஆசிரியர் 1970-1971 காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து மாதாந்தம் கொழும்புக்கு வரும்பொழுது நீர்கொழும்பில் இருக்கும் அவரது சகோதரர் குடும்பத்தினரைப் பார்ப்பதற்காக வருவார். அந்தச் சமயங்களில் ஏற்கனவே இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட நீர்கொழும்பூர் முத்துலிங்கம், மு.பஷீர், மற்றும் செல்வரத்தினம், தருமலிங்கம், சந்திரமோகன், பவாணிராஜா, நிலாம் உட்பட பலர் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள்.




இந்தச் சந்திப்புகள் பெரும்பாலும் நீர்கொழும்புக் கடற்கரையில் இடம்பெறும். நானும் ஆர்வமுடன் கலந்துகொண்டு உரையாடுவேன். மல்லிகை ஜீவாவுடன் விவாதிப்பேன். அச்சமயம் ஜெயகாந்தனைப் பற்றி அவர் காரசாரமான விமர்சனக் கட்டுரைத் தொடர் எழுதிக் கொண்டிருந்தார். அத்தொடர் எமது கலந்துரையாடலில் விவாதப்பொருளாகும். எனது கருத்துக்களை கூர்ந்து அவதானித்த ஜீவா ஒருநாள், " நிறைய விவாதிக்கிறீர். நீரும் எழுதலாமே" என்றார்.

அவர் தந்த உற்சாகத்தில் கனவு என்ற சிறுகதையை எழுதினேன். அச்சிறுகதை நீர்கொழும்பு பிரதேசத்தில் கடற்றொழிலை நம்பி வாழும் மக்களைப் பற்றியது. அதனை, செல்வரத்தினம் (இவர் தற்போது பிரான்ஸில் இணையத்தளம் நடத்துகிறார்) நீர்கொழும்பூர் முத்துலிங்கம் ஆகியோரிடமும் காண்பித்தேன். அதற்கு முன்னர் எமது பிரதேச மக்களின் பேச்சு மொழி வழக்கில் எவரும் படைப்பிலக்கியம் படைத்திருக்கவில்லை.

குறிப்பிட்ட கனவு கதை மீனவ மாந்தரின் கனவுகளின் சித்திரிப்பாக அமைந்திருந்தமையால் 'அதனை எதற்கு அனுப்பவிருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். 'மல்லிகைக்கு' எனச்சொல்லிவிட்டு தபாலில் அனுப்பினேன். கனவுகள் ஆயிரம் எனத்தலைப்பிட்டு ஜீவா அதனை மல்லிகை ஜூலை இதழில் பிரசுரித்தார்.

இவ்வெற்றிகள் தானாக அவர் மடியில் வந்து விழவில்லை.... உழைப்பு... உழைப்பு.... உழைப்பு! வெற்றியின் இரகசியம் என்ன என்ற கேள்விக்கு அவர் சொல்லும் விடை, ஆள் பலம், அரசியல் பலம், பண பலம் என்றைக்குமே தற்காலிகமானவைதான். ஆன்ம பலம் தான் நிரந்தரமானது. அதுதான் உழைப்பின் அடிப்படை!

அந்த 'முதல்' புது நூற்றாண்டிலும் தொடர்ந்தது.

2001 இல் முருகபூபதி எழுதிய 'பறவைகள்' எனும் முதல் நாவலுக்கு இலங்கை தேசிய சாதித்ய விருது பெற்று கௌரவிக்கப்பட்டார்.

இது இவரின் மூன்றாம் 'முதல்'!

தானுண்டு தன் வேலையுண்டு என ஒதுங்கியிருக்காமல் பல இலக்கிய ஆழுமைகளுடன் தன்னை இணைத்துக் கொண்டு ஒரு வேட்கையுடன் எழுதிக் கொண்டே இருந்தார். இவரின் வேட்கைக்கு களம் அமைத்துக் கொடுத்தது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம். இதுவே முருகபூபதியின் மறு தாய் வீடு.

1987 இல் ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் தமிழ் எழுத்தாளர் சங்கம் எனும் படைப்பாளிகளுக்கான அமைப்பை அமைத்து இலக்கியம் சமைக்கிறார் முருகபதி. 2011 இல் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம இணைப்பாளராகச் செயற்பட்டார்.

முருகபூபதி மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஆஸ்திரேலியாவில் பன்முக கலாச்சார இணைப்பு மற்றும் சமூக ஒற்றுமைக்கு ஒரு சக்திவாய்ந்த தொடர்பாளராக இருந்து வருகிறார். தனது சொந்த புலம்பெயர்ந்த அனுபவம் மற்றும் ஆழமான கலாச்சார பாரம்பரியத்தில் இருந்து உருப்பெற்ற அவர், பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த மக்களை ஒன்று திரட்டி இலக்கியத்தைப் பகிர்ந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவும் தனது வாழ்க்கையை புலம்பெயர் மண்ணில் அர்ப்பணித்துள்ளார் என்பது உண்மை.

ஊடகங்கள் மற்றும் இலக்கியத்தில் ஊறிய தனது பின்னணியைப் பயன்படுத்தி, தென்னிந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த முக்கிய எழுத்தாளர்களைக் கொண்ட இலக்கிய விழாக்கள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளை ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஊடாக ஏற்பாடு செய்தார். இந்த நிகழ்வுகள் கலாச்சார பரிமாற்றத்தின் முக்கிய தளங்களாக மாறியதுடன், தமிழ், சிங்களம் மற்றும் பரந்த ஆஸ்திரேலிய சமூகங்களில் இருந்தும் பார்வையாளர்களை ஈர்த்தது.

வரலாற்று ரீதியான இன மோதலால் பிரிக்கப்பட்ட தமிழ் மற்றும் சிங்கள எழுத்தாளர்கள் இடையே இங்கே பரஸ்பர புரிதலை ஊக்குவிக்க அவரின் முயற்சிகள் பெரிதும் உதவின. தோழர் லயனல்

தொடர்ச்சி▼

# லெட்சுமணன் முருகபூபதி; ஒரு பன்முக ஆளுமை!

தொடர்ச்சி▲

போபகே அவர்களுடனான உறவு இந்தப் புரிந்துணர்வுக்கு மேலும் வலுச்சேர்த்தன. மொழி, இலக்கியம் மற்றும் பாரம்பரியத்தில் கவனம் செலுத்துவதன் மூலம், ஒரு காலத்தில் தடைகள் இருந்த இடங்களில் பாலங்களை உருவாக்க முடியும் எனும் அவரின் நம்பிக்கை வீண் போகவில்லை.

மேலும் கோவிட் 19 தொற்றுக் காலத்தின் போது சமூகத்தை இணைக்க 'சூம்' வழியாக மெய்நிகர் நிகழ்வுகளை நடத்தி போது, எமது சமூகத்தின் பல மூத்த பிரஜைகள் இந்த மெய்நிகர் நிகழ்ச்சிகளில் உற்சாகமாக கலந்து கொண்டு தம் தனிமையைத் தொலைத்த கதைகள் உண்டு. அது மட்டுமல்லாமல், பிராந்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான உறவுகளை இவை விரிவுபடுத்தின.

எழுத்தாளர் முருகபூபதி பல மட்ட அரச நிறுவனங்கங்களுடன் இணைந்து பன்முக கலாச்சார இலக்குகளை மேலும் வலுப்படுத்தி மேம்படுத்தியுள்ளார். அவரது நிகழ்வுகளில் பெரும்பாலும் உள்ளூர் நகர சபைகள் மற்றும் கூட்டாட்சி அலுவலகங்களின் பிரதிநிதிகளை வரவேற்று, சமூக கொள்கை வகுப்பாளர்களிடையே தொடர்பை ஊக்குவித்தன.

முருகபூபதி பல வடிவங்களில் தம் எழுத்துக்களைப் பொறித்தார். சிறுகதை தொகுதி (8), கட்டுரை (15), புதின நூல் (1), சிறுவர் இலக்கியம் (1), பயண இலக்கியம் (1), கடித இலக்கியம் (1), நேர்காணல் தொகுப்பு (1) என பன்முக தலைப்புகளில் எழுதி வெளியிட்டுள்ள முருகபூபதி பல இலக்கிய பேட்டிகளையும் உரைகளையும் காணொலியில் பதிவிட்டுள்ளார்.

இவரது பல நூல்கள் அமேசன் கிண்டலில் மின் நூல் வடிவில் பதிவேற்றப்பட்டுள்ளன. இவை நிச்சயம் எமது இளம் சமுதாயத்தினரைக் கண்டடையும் என நிச்சயம் நம்பலாம்.

மேலும் இவரது புதிய மின்நூல் "காலமும் கணங்களும்" இவ்வாரம் அமேசன் கிண்டலில் பதிவேற்றப்பட்டுள்ளது. இதை ஜுலை 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை வாசகர்கள் இலவசமாய் பதிவிறக்கம் செய்து வாசிக்க முடியும். இந்நூலில் அவர் தனது எழுத்துலக பயணத்தில் சந்தித்த 25 ஆளுமைகளைப் பற்றிச் சுவாரசியமாய் எழுதியுள்ளார்.

இலங்கையில் மல்லிகை, ஞானம் மற்றும் ஜீவநதி முதலான இலக்கிய இதழ்களில் அட்டைப்பட அதிதியாக கௌரவிக்கப்பட்டுள்ளார்.

"என் உழைப்பைக் கண்டு வியக்காதீர்கள். ஏனென்றால் எழுதுவதே என் தொழில்!" என்கிறார் இந்த தன்னடக்கச் சிற்பி!

விலகி நில்லுங்கள்! அவர் எழுதட்டும்! எழுத்துக்கள் ஓயும்வரை எழுதட்டும்!





# மகளிர் உரிமைத் தொகையை நிறுத்தி விடுவதாக மிரட்டி தி.மு.க. உறுப்பினர்கள் சேர்ப்பு; இ.பி.எஸ்

தி.மு.க. உறுப்பினர்களாக சேர வில்லை என்றால் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட சலுகைகளை நிறுத்தி விடுவேன் என்று கூறி மிரட்டுகின்றனர் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

'மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற பிரச்சாரப் பயணத்தின் ஒரு பகுதியாக நேற்று மாலை கடலூரில் பொதுமக்களிடையே எடப்பாடி பழனிசாமி தெரிவிக்கையில்,

"கடலூர் மாவட்டத்தில் தானே புயலின் போது நாங்கள் ஓடி வந்து நிவாரண உதவிகளை செய்தோம்.

கடந்த ஆட்சியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விலையில்லா கறவை மாடு, ஆடு, கோழிகளை திமுக அரசு நிறுத்திவிட்டது. மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வரும்போது, இவை வழங்கப்படும். ஏழை பெண்களுக்கான தாலிக்கு தங்கம் திட்டமும் மீண்டும் செயல்படுத்தப்படும்.

ஸ்டாலின் கடன் வாங்குவதில்தான் சூப்பர் முதல்வராக உள்ளார். வரி, கட்டணங்களை உயர்த்தி மக்களைப் பரிதவிக்கச் செய்துள்ளனர். குப்பைக்கு வரி போட்டது தி.மு.க. அரசுதான். சொன்னதைச் செய்யாமல், மக்களை ஏமாற்றி வாக்கு பெறுவதில் விஞ்ஞான மூளைக்காரர்கள் தி.மு.கவினர்.

தி.மு.க. ஆட்சியில் பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளதாக கூறுகின்றனர். ஒரு திட்டத்தை ஸ்டாலின் அறிவிப்பார். அதற்கு குழு போடுவார். இதுவரை 52 திட்டங்களை அறிவித்து, 52 குழுக்கள் போட்டுள்ளனர். உதயநிதி ஸ்டாலின் தனது படத் தயாரிப்பு நிறுவனம், படங்களை அடிமாட்டு விலைக்கு வாங்கி, பல கோடி லாபத்துக்கு விற்பனை செய்கிறார்.

டாஸ்மாக் மூலம் ஆண்டுக்கு 5,400 கோடி இந்திய ரூபா மேலிடத்துக்கு செல்கிறது. இதில் பெரிய ஊழல் நடக்கிறது. அமலாக்கத் துறை 1,000 கோடி ரூபாவுக்கு ஊழலைக் கண்டுபிடித்து, வழக்கு பதிவு செய்துள்ளது. தி.மு.கவினர் ஆட்டம் 8 மாதங்கள்தான் நீடிக்கும்.

கடலூரில் ஆட்சியர் அலுவலகம் அருகே 18 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி, பஸ் நிலையம் அமைக்க அ.தி.மு.க. ஆட்சியில் அரசாணை வெளியிடப்பட்டது. தி.மு.க. அரசு வந்தவுடன் அமைச்சர் தன் தொகுதிக்கு பேருந்து நிலையத்தை மாற்றிவிட்டார். தி.மு.கவினர் தங்கள் குடும்பத்தை பற்றி மட்டுமே சிந்திப்பார்கள்.

தேர்தல் வருவதால்தான் 'உங்களுடன் இருக்கிறேன்' என ஸ்டாலின் நினைவுபடுத்துகிறார். நாலரை ஆண்டுகளாக அக்கறையில்லாமல், தற்போது வீடு வீடாகச் சென்று உறுப்பினர்களை சேர்க்கிறார்கள். சேரவில்லை என்றால் மகளிர் உரிமைத்தொகை உள்ளிட்ட சலுகைகளை நிறுத்தி விடுவேன் என்று கூறி, மிரட்டுகின்றனர்." என்றார்.

# போராட்டத்தில் குதிக்கும் தமிழக வெற்றிக் கழகம்



அஜித்குமார் மரணத்திற்கு நீதி கோரி விஜய் தலைமையில் தமிழக வெற்றிக் கழகம் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு அனுமதி கோரியிருந்தது.

சென்னை சேப்பாக்கத்தில் நடைபெறவிருக்கும் இந்த போராட்டத்திற்கு 15 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பட்டாசுகள் வெடிக்கக் கூடாது. உந்துருளி ஊர்வலத்தில் ஈடுபடக்கூடாது உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

சுமார் 15 ஆயிரம் பேர் போராட்டத்தில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் 2000 பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இன்று நடைபெறும் இந்த போராட்டத்தில் விஜய் முற்பகல் 10 மணி முதல் 11 மணிக்குள் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதற்கட்ட அறிக்கையை வைத்து எந்த முடிவுக்கும் வர வேண்டாம்

## விமான போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு



விமான விபத்து தொடர்பான முதற்கட்ட அறிக்கையை வைத்து எந்த ஒரு முடிவுக்கும் வர வேண்டாம் என்று சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு வலியுறுத்தியுள்ளார்.

குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து லண்டன் புறப்பட்ட ஏர் இந்தியாவின் போயிங் 787-8 ட்ரீம் லைனர் விமானம் கடந்த ஜூன் 12 ஆம் திகதி விபத்தில் சிக்கியது. இதில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்தனர். பிரிட்டிஷ் – இந்திய பயணி ஒருவர் மட்டும் உயிர் பிழைத்தார். விமானம் மருத்துவக் கல்லூரி விடுதியில் மோதியதில் மருத்துவ மாணவர்கள் உட்பட 33 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டு வரும் விமான விபத்துக்கான புலனாய்வு அமைப்பு (ஏ.ஏ.ஐ.பி) தனது முதற்கட்ட விசாரணை அறிக்கையை நேற்று வெளியிட்டது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

“விமானத்தின் 2 இன்ஜின்களுக்கும் எரிபொருள் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் சுவிட்சுகள் உள்ளன. அந்த சுவிட்சுகள் ‘ரன்’ என்ற நிலையில் இருந்தால், எரிபொருள் சென்று கொண்டிருக்கும். ‘கட் ஆஃப்’ நிலையில் இருந்தால் என்ஜினுக்கு எரிபொருள் செல்லாது. விமானம் புறப்படத் தொடங்கிய உடன் திடீரென ஒரு நொடிக்குள் ‘ரன்’ என்ற நிலையில் இருந்து ‘கட் ஆஃப்’ என்ற நிலைக்கு சுவிட்சுகள் மாறி உள்ளன. இதனால், என்ஜினுக்கு எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டு விபத்து நிகழ்ந்துள்ளது.” என்று தெரிவித்துள்ளது.

எனினும், எரிபொருள் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் சுவிட்சுகள் எவ்வாறு ‘ரன்’ என்ற நிலையில் இருந்து கட் ஆஃப் நிலைக்கு மாறின என்பது குறித்து அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை.

இதனிடையே, இந்திய விமான விமானிகள் சங்கம் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

“விமானிகள்தான் குற்றவாளிகள் என்பதாக ஊகித்து விசாரணை ஒரு குறிப்பிட்ட திசையில் மட்டுமே செல்கிறது. இந்த முக்கியமான விசாரணைக்கு தகுதியான பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை. விசாரணை வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற வேண்டும்.” என தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்த விகாரங்கள் தொடர்பாக விசாகப்பட்டிணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ராம் மோகன் நாயுடு,

“விசாரணை அறிக்கையில் ஆரம்பகட்ட கண்டுபிடிப்புகள் மட்டுமே உள்ளன. இவ்விஷயத்தில் அவசரப்பட்டு நாம் எந்த ஒரு முடிவுக்கும் வந்துவிடக்கூடாது. விசாரணைக் குழு பாராட்டுக்குரிய வகையில் விசாரணையை மேற்கொண்டு வருகிறது. விசாரணை முதிர்ச்சியானதாகவும் வெளிப்படையானதாகவும் உள்ளது.

விசாரணைக் குழுவுக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் நாங்கள் ஒருங்கிணைத்து வழங்கி வருகிறோம். இறுதி அறிக்கை விரைவில் வரும் என்று நாங்கள் நம்புகிறோம். அப்போது, விபத்து தொடர்பாக சில முடிவுகளுக்கு எங்களால் வர முடியும். விமானிகள் மற்றும் விமானப் பணியாளர்களைப் பொறுத்தவரை, உலகின் சிறந்த விமானிகளும் விமானப் பணியாளர்களும் எங்களிடம் இருப்பதாக நான் உண்மையாகவே நம்புகிறேன்.” என தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் வென்றால் கூட்டணி ஆட்சியா? அமித் ஷா கருத்துக்கு பழனிசாமி மறுப்பு



தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வென்றால், கூட்டணி ஆட்சிதான் அமையும் என்ற அமித் ஷாவின் கருத்தை திட்டவட்டமாக மறுக்கும் வகையில், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதில் அளித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் 2026 இல் அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் இணைந்துள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றால், தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமையும் என்று சமீபத்திய பேட்டி ஒன்றில் மத்திய அமைச்சர் அமித் ஷா உறுதிபட தெரிவித்துள்ளார். இது அ.தி.மு.க. கூட்டணியில் மீண்டும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், அமித் ஷாவின் ‘கூட்டணி ஆட்சி’ என்ற நிலைப்பாடு குறித்து புதுச்சேரியில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு, “தமிழகத்தில் பெரும்பான்மையுடன் அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்” என்று மட்டும் ஒரே வரியில் கூறிவிட்டு, எடப்பாடி பழனிசாமி புறப்பட்டுச் சென்றார்.

இதன்மூலம், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டணி வெற்றி பெற்றால், பா.ஜ.கவுடன் கூட்டணி ஆட்சி என்ற அமித் ஷாவின் கருத்தை அவர் முற்றிலும் மறுத்துள்ளது தெரிய வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, எடப்பாடி பழனிசாமியின் ‘அ.தி.மு.க. ஆட்சி மட்டுமே’ என்ற கருத்தும் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது.

இதனிடையே, ‘மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்’ பிரச்சாரப் பயணத்தின்போது பொதுமக்கள் மத்தியில் பேசும்போதும், “2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. வென்று, தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்” என்று எடப்பாடி பழனிசாமி அழுத்தமாக கூறி வருவதும் கவனிக்கத்தக்கது.

# ஐரோப்பிய நாடுகளுக்கும் 30 வீத வரி விதித்தார் ட்ரம்ப்

மெக்சிகோ மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 30 வீதம் வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முக்கிய நட்பு நாடுகள் மற்றும் உயர்மட்ட வர்த்தக பங்காளிகளுடன் பல வாரங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததையடுத்தே இந்த அறிவிப்பை ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் இந்த வரி அமுலுக்கு வரும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இலங்கை, ஜப்பான், தென் கொரியா, கனடா, பிரேசில் உள்ளிட்ட பல நாடுகளுக்கு வரி விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# காசா உதவி மையங்களில் 800 பாலஸ்தீனர்கள் கொலை







காசாவில் உதவி மையங்கள் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில், மே முதல் இதுவரை 800 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என ஐக்கிய நாடுகள் சபை தகவல் தெரிவித்துள்ளது.

காசாவை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் தீவிரவாத அமைப்பு, 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இஸ்ரேல் மீது தாக்குதலை நடத்தியது.

இதைத் தொடர்ந்து, ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் மீது இஸ்ரேல் போர் தொடுத்தது.

அந்தவகையில், காசாவில் பல்வேறு இடங்களில் இஸ்ரேலிய படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

குறிப்பாக, காசாவில் உதவி மையங்களில் இஸ்ரேலிய படையினர் தாக்குதல் நடத்தி வருவதால், பதற்றமான சூழல் நிலவி வருகின்றது.

உதவி மையங்கள் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில், இஸ்ரேலிய படையினரின் தாக்குதலில், 2025 மே முதல் இதுவரை 800 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

மே மாத இறுதியிலிருந்து காசாவில் உள்ள உதவி மையங்களிலிருந்து, உணவு பெற முயன்றபோது பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு வருவதாகவும், 2025 மே 7 ஆம் திகதி முதல் இதுவரை 798 பேரின் கொலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ரவினா ஷம்தாசானி தெரிவித்துள்ளார்.

அவற்றில், 615 பேர் உதவி மையங்களில் உணவு பெற முயன்ற போது கொல்லப்பட்டதாகவும், 183 பேர் உதவி மையங்களுக்கு அருகில் உள்ள பகுதிகளில் கொல்லப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -13.07.2025




தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி பெறலாம். உங்களிடம் காணப்படும் உற்சாகமான போக்கு காரணமாக நீங்கள் உங்கள் செயல்களை எளிதாக ஆற்றுவீர்கள்.

பணியில் உங்களுக்கு ஏற்படும் திருப்தியான உணர்வு காரணமாக நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை அடைவதற்கு அதிக பணம் காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் முன்பு எடுத்த விவேகமான முடிவு காரணமாக இன்று உங்களின் நாள் வெற்றிகரமாக அமையும். உங்களிடம் இன்று உறுதியும் உற்சாகமும் காணப்படும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான நிலை காணப்படும்.சக பணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் செயல்திறனுக்கு பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் நேர்மறையான மற்றும் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நேர்மறையான கண்ணோட்டம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு எதிர்பாராத நன்மைகள் நடக்கும். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளைக் கையாளும்போது இன்று பொறுமை மேற்கொள்ளவேண்டியது அவசியம்.

உங்களின் குழப்பமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் தலைவலியால் பாதிக்கப்படுவீர்கள். அமைதியான போக்கு நல்ல பலன் தரும்.




பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

பணியில் திருப்தியின்மை காணப்படும். திட்டமிட்ட முயற்சியின் மூலம் உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை ஜெயிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை கான்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க எதிர்மறை எண்ணங்களை தவிர்த்தல் வேண்டும்.மனம் திறந்து பேச வேண்டும்.

உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று சேமிப்பதற்கும் வாய்ப்பு இருக்காது.

இன்று செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம்.எனவே தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்று நல்ல பலன்கள் கிடைக்கும் நாள். திட்டமிட்ட முயற்சியும் நேர்மறை எண்ணங்களும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

வேலைகள் அதிகமாக காணப்பட்டாலும் நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் செயல் திறனில் உங்கள் தன்னம்பிக்கை வெளிப்படும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு இருவரும் மகிழ்ச்சி யடைவீர்கள்.

இன்று உங்களிடம் கணிசமான பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நிறைந்த மன ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். இன்று உங்களிடம் பதற்றம் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் தரும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. நேர்மையாக பணியாற்றுவது சவாலானதாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். இல்லாவிடில் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும். உறவுப் பிணைப்பை வலுப்படுத்த அன்பாக இருங்கள்.

உங்களின்அஜாக்கிரதைகாரணமாகஇன்றுபயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.

உங்களிடம் தேவையற்ற கவலைகள் காணப்படும். இதனால் தலைவலிக்கு ஆளாவீர்கள்.




இன்று சிறிது மந்தமாக காணப்படுவீர்கள். திட்டமிட்ட முயற்சியும் செயல்களில் விழிப்புணர்வும் தேவை. இன்று உங்களுக்கு அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.

பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக உங்களிடம் கவனக்குறைவு காணப்படும். திட்டமிட்டு கவனமுடன் இருந்தால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு இருப்பதாக உணர்வீர்கள். இருவரும் மனம் திறந்து பேசுவதன் மூலம் இந்த நிலையை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. செலவுகள் அதிகமாக காணப்படுவதன் காரணமாக இன்று பணம் கையாள்வது கடினமாக இருக்கும்.

இன்று செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம்.எனவே தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.




இன்று நீங்கள் கடின உழைப்பின் மூலம் வெற்றி காணலாம். ஆன்மீக ஈடுபாடு மற்றும் ஏழைகளுக்கு செய்யும் உதவி மூலம் ஆறுதல் பெறலாம்.

பணிகள் அதிகமாகவும் சவாலானதாகவும் இருக்கும். வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் ஏற்படும் தவறான புரிந்துணர்வு காரணமாக உறவில் நல்லிணக்கம் பாதிக்கும். நீங்கள் சிறிது ஏமாற்றகரமாக உணர்வீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பதற்றம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். ஆரோக்கியமாய் இருக்க அமைதியாய் இருங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -13.07.2025




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகள் எடுக்கலாம். விரைவான செயல்கள் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்களின் சிறந்த முயற்சி மூலம் உங்கள் செயல்திறனை மேம்படுத்த இயலும். உங்களின் தனித்த திறனும் திறமைகளும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் காணப்படும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருந்து மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலை காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப்படும். எந்த விஷயத்தையும் யதார்த்தமாக கையாள வேண்டும். சவாலான சூழ்நிலைகளை எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி தைரியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு காணப்படாது. அதிகப்படியான பணிகள் கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடை–யே நல்ல புரிந்துணர்வும் உறவில் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க சிறப்பாக திட்டமிட வேண்டும்.

வயிற்று வலியினால் சில பிரச்சினைகள் ஏற்படும். நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்றைய நாள் சாதகமான பலன்கள் தருவதைக் காண்பீர்கள். சமநிலையோடு இருந்தால் சரியான முடிவெடுத்து வெற்றி காணலாம். இன்று உங்களிடம் அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்களின் தனித்த திறன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டை உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நண்பர்களின் இல்லத்திற்கு உங்கள் துணையை அழைத்துச் செல்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் வலிமையுடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு அனுகூலமாக இருக்காது. நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று வெற்றி பெறுவதற்கு அமைதியான கட்டுப்பபாடான அணுகுமுறை தேவை.

திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் பணியில் தவறுகளை தவிர்க்கலாம். என்றாலும் உங்கள் மேலதிகாரிகளிடம் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் பாதிக்கும். எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்வதன் மூலம் உறவுப் பிணைப்பை வலுப்படுத்த முடியும்.

பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று மோசமான ஆரோக்கியம் காணப்படும். தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இந்தியாவிலிருந்து அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வருகை



இந்த மாதத்தின் முதல் 8 நாள்களில் இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, 10,153 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்துடன், பிரித்தானியாவில் இருந்து 4,860 சுற்றுலாப்பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 3,310 சுற்றுலாப்பயணிகளும் வருகைதந்துள்ளனர்.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம், 1,216,344 சுற்றுலாப்பயணிகள் வருகைதந்துள்ளனர் என அந்த சபை குறிப்பிட்டுள்ளது.